[2013 அக்டோபர் 24

4—

கற்சிற்பக் கலைக் கூடம்

***29398—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் கற்சிற்பக் கலைக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் மாமல்லபுரத்தில் தற்போது ஒரு கற்சிற்பக் கலைக் கூடம் இயங்கி வருகிறது. எனவே, புதுக்கோட்டையில் கற்சிற்பக் கலைக் கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை என்பதனைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குத் தாயாய், தந்தையாய், ஆசானாய், தெய்வமாய், எல்லாமுமாக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடியை வணங்குகிறேன். பாரம்பரியம், பண்பாட்டுச் சிறப்பு மற்றும் வரலாற்றுப் பின்னணியும்கொண்ட புதுக்கோட்டையில் வரும் நிதியாண்டிலாவது பிரத்யேக கற்சிற்பக் கலைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். கைவினைக் கலைஞர்கள் மேம்பாடு சிறக்க அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் கற்சிற்பக் கலைக் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லையென்றாலும்கூட, புதுக்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கற்சிற்பக் கைவினைஞர்கள், கற்சிற்பக் கலைஞர்களுக்குத் தேவைப்படும் பயிற்சி, பயிற்சியில் ஈடுபட ஆர்வமுள்ள இளைஞர்கள், தயாரிக்கப்படும் கற்சிற்பங்களின் மதிப்பு, கற்சிற்பங்களுக்கான தேவை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு, தேவையிருப்பின், புதுக்கோட்டையில் கற்சிற்பக் கலைக் கூடம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கைவினைஞர்களின் மேம்பாட்டுக்காக இந்த அரசு என்ன செய்கிறது என்கிற கேள்வியை இங்கே வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் முதன்முதலாக 1991-ல் பொறுப்பேற்கிறபோது, 1992-1993-லேயே உதவித் தொகையுடன்கூடிய ஒரு சிறப்பான பயிற்சியை, கைவினைஞர்களுக்கு அளிக்கக்கூடிய அளவில் ரூ.1,000 அளவிற்கு உபகரணங்களோடுகூடிய அந்தப் பயிற்சியை கற்சிற்பக் கைவினைஞர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கே வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறப்பான திட்டங்களையெல்லாம் கைவினைஞர்களுக்குத் தருகிறவகையிலும், அவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலும், ரூ. 83 இலட்சம் செலவில் ஸ்ரீரங்கத்தில் 100 மகளிருக்கு ஒரு வருட பயிற்சியும், ரூ.30 இலட்சம் செலவில் 3 ஆண்டு, பயிற்சியும், விழுப்புரம் மாவட்டம் சின்னசேலத்தில் ஓர் ஆண்டு பயிற்சியும் அளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் கைவினைஞர்களின் மேம்பாட்டுக்காக ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மேலும், தமிழ்நாட்டில் கைவினைஞர்களின் பொருட்களை வெளிமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் விற்பனை செய்யக்கூடிய வகையில், கைவினைஞர்களுக்கு உதவி செய்கிற வகையில், ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, அந்தக் கைவினைஞர்களுடைய பொருட்களுக்குச் சந்தை ஏற்படுத்துகிற

வகையில், ரூ.2 கோடி நிதியை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

5—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***14351**—**திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றியம், நெசல் மற்றும் தென்றல் நகர் பகுதிகளில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதி, ஆரணி ஒன்றிம் நெசல் ஊராட்சியில், நெசல் நகர் மற்றும் தென்றல் நகர் என இரண்டு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. நெசல் நகர் அங்கன்வாடி மையம் 1982 முதல் நெசல் நகர் உயர் நிலைப் பள்ளி வளாகத்தில் அரசுக் கட்டடத்தில் இயங்கி வந்தது. இம்மையத்தின் கட்டடத்தில் மேற்கூரை, தரை, ஜன்னல், கதவு, சுவர் விரிசல்